# 1.4 என்னைப் பறக்க விடு

**இலக்கு**

*பறக்கும் பட்டத்தை ஒரு குறியீடாகக் கொண்டு மாணவர்கள் ஏற்புடைய ஒருமைப்பாடுகள் வகிபாகங்களுடனான தம்முடைய பண்பாட்டு அடையாளம் பற்றி உருக்காட்டல் செய்வர். அவர்கள் தாம் வெறுமனே இரண்டு பண்பாடுகளுக்கும் நாடுகளுக்கும் இடையே இடர்படுவதாக உணராமல் இருநாடு, பண்பாட்டைக் கொண்டுள்ளதற்காக பெருமைப்பட்டுக்கொள்வர்.*

வகுப்பு 4 - 9 | அண்ணளவாக 2 பாடங்கள்

**கருவிகள்:**
பணித்தாள் (பட்டம் செய்வதற்கான விளக்கமுடன்), எடுத்துக்காட்டாக, பட்டம் செய்வதற்கு ஒரே அளவாக வெட்டிய இரண்டு தாள்கள். வாலுக்கு தாள் கீற்றுகள், நூல் மற்றும் நிறப் பென்சில்கள்.

**குறிப்புகள்:**

ஒருவரின் சொந்த பல்பண்பாட்டு அடையாளத்தைப் பற்றிய உருக்காட்டுதலை 2-3 கிழமைகளுக்கு ஒரு கருத்திட்டமாக நீட்டிக்க முடியும். அவ்விடத்தில் பட்டத்தின் தனித்த பகுதிகள் ஆழமாக ஆராயப்படுகிறது. அப்படிச் செய்யும் போது உருக்காட்டுதல் கேள்விகள் மாணவரின் தேர்ச்சி மட்டங்களுக்கு இணங்க ஒழுங்கமைக்கப்படுகின்றன. அந்தக் கருத்திட்டமானது வழமைக்கல்வி ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் ஈடுபாட்டுடன் நடைமுறைப்படுத்தலுக்கு தானே இட்டுச் செல்கிறது. அக்கருத்திட்டத்தின் முடிவில் பட்டங்கள் பறக்க விடப்படுதல் ஒரு பகுதியாகும். எப்படியும் இது இன்னுமொரு படிமுறையை வேண்டி நிற்கின்றது (பட்டத்தின் புறவடிவத்தைப் பொருத்தமான தாளுக்கு மாற்றி காற்றில் பறக்கக்கூடிய ஒரு பொருத்தமான வடிவமைப்பை வழங்கல்.)

---

**நடைமுறை:**

- நடைமுறையைத் தொடங்குவதற்கு, ஆசிரியர் பட்டத்தின் பாகங்களை அடையாளக் குறியீடாக வழங்குவர். செயற்பாட்டுக்கு எடுத்துக்காட்டாகப் பட்டத்தைக் காட்டிப் பணித்தாளை விளங்கப்படுத்துவார். பட்டத்தின் புறவடிவையும், இப்பகுதிகளுக்கான பாகங்கள் குறித்து நின்றனவோ அவற்றையும் செயற்பணித்தாள் காட்டும். ஒவ்வொரு பகுதியும் ஒரு வாழும் சூழலையும் ஒரு பகுதி அடையாளத்தையும் குறித்து நிற்கும். எ.கா. குடும்பம், பாடசாலை, நட்பு, அயலவர் முதலியன. ஒவ்வொரு பகுதி அடையாளமும் வாழும் சூழலும் ஒரு தொடர்பான வகிபாகத்துக்கு உரித்துடையதாகின்றது. எல்லா வகை பகுதியான அடையாங்களின் வகிபாகங்களின் கூட்டுத் தொகையாக ஒரு ஆளுமையும் அடையாளமும் உருவாக்கப்படுகின்றது. அந்த விளக்கமான அறிமுக கலந்துரையாடல் எல்லா மாணவர்களும் பின்வரும் ஒப்படைகளை விளங்கிக்கொண்டனர் என உறுதிப்படுத்த வேண்டும்.

- முதலில், பட்டத்தின் மத்தியில் ஒரு புன்னகை புரியும் முகம் ஒன்றை மாணவர் இடவேண்டும். (கையால் கீறிய அல்லது ஒட்டப்பட்ட படம்) புன்னகையைச் சுற்றித் தங்களைப் பற்றிய இன்றியமையாத தகவல்களைச் சொற்களால் தாமே எழுதுவர் (வயது, விருப்பு, உடன்பிறந்தோர், மொழி, சில குணங்கள்)

- அவர்கள் பட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்குப் பெயரிடுவர். பணித்தாளின் மேலுள்ள அட்டவணையில் தனித்த கட்டங்களுக்கான தகவல்களைப் பதிவு செய்வர். பட்டத்தின் முன்பகுதியைக் குடியேறிய நாட்டில் வாழும் சூழலுக்கும் பிற்பகுதியைப் பிறந்த நாட்டுக்கும் பயன்படுத்துவது நல்ல கருத்தாகும். ஆறு முக்கோணங்கள் போதுமானவையாக இல்லாதுவிடின் அவற்றை (அல்லது சிலவற்றையாவது) மேலும் அரைவாசியாகப் பிரிக்கமுடியும்.

- அடுத்த படியாக, வேறுபட்ட / ஒத்த உறுப்பினர்களின் அடையாளங்களை அதாவது (முறை) பற்றி வகுப்பு கலந்துரையாடுகிறது. மாணவர்களின் விழிப்புணர்வை அதிகரிப்பதற்கு, ஆசிரியர் கதாபாத்திரத்தின் பகுதி அடையாளங்களை (ஒன்று விட்ட சகோதரன், விளையாட்டு வீரன், மாணவர், கழக உறுப்பினர்) பரிந்துரைக்கிறார். அப்படியான ஒரு பதிவினையுடைய பட்டத்தை உடைய மாணவர்கள் எழுந்து நின்று அறிவிப்பர்.

- பட்டம் பற்றிய எண்ணக்கருவை 4 பேர் கொண்ட குழுக்களில் அளிக்கை செய்து விளங்கப்படுத்துவது கைகூடுவதாகும். விவாதத்திற்கான தூண்டியாக ஆசிரியர் பின்வரும் கேள்விகளை பலகையில் எழுதிக் கேட்க முடியும். "அடையாளத்தை ஏற்படுத்துவது எது? என்னுடைய அடையாளத்தின் இன்றியமையாத பண்புகள் யாவை? நான் எந்தக் குழுவில் இருப்பதாக உணர்கிறேன்? எனது பகுதி அடையாளங்களின் / வாழும் சூழல்களின் அடிப்படையில் எந்த வலிமைகளையும் வளங்களையும் நான் கொண்டிருக்கிறேன்? எது எனக்கு முக்கியமானது? எந்த நம்பிக்கைகள், நியமங்கள், எண்ணங்கள் என்னிடம் கடத்தப்பட்டுள்ளன? "

- இறுதிக் கலந்துரையாடலில் முக்கியமாக பல்வகை அடையாளங்களைப் பற்றி பிரதிபலிக்கும்படி உரையாடப்படவேண்டும். கலந்துரையாடலுக்கான தூண்டிகள் வயதுப் பொருத்தமானவையாகவும் பின்வரும் முக்கிய கருப்பொருட்களை ஒட்டியதாகவும் அமையவேண்டும்:
    - எந்த அடையாளப் பகுதிகள் குறிப்பாக உங்களுக்கு முதன்மையாகின்றன? ஏன்?
    - எந்த அடையாளப் பகுதிகள் உங்களுக்குத் தொடர்பு இல்லாதவை? ஏன்?
    - உங்கள் தொடக்ககால நாள்களுக்கு மிகவும் (அல்லது மட்டுமேயான) இன்றியமையாத பண்புகள், பங்களிப்புக்கள் ஏதும் உண்டா?
    - பகுதி அடையாளங்கள் பற்றிய வரிசை அடுக்குகள் ஏதும் உண்டா?
    - உம்மால் அடையாளம் காணப்பட முடியாவிடினும் வெளியிலிருந்து / சமூகத்திலிருந்து உமக்குத் தரப்பட்ட பகுதி அடையாளங்கள் ஏதும் உண்டா?
    - உமது அடையாளத்துக்கு உமது மொழி வகித்த பங்கு என்ன?
    - எந்த கதாபாத்திரங்கள் உங்கள் பட்டத்தில் அதிக அளவு இடத்தை எடுத்துக்கொள்கின்றன, குறிப்பாக சிறிய அளவு எவை?
    - உமக்கு குறிப்பாக பிடித்த, பிடிக்காத கதாபாத்திரங்கள் ஏதாவது உண்டா?
    - இந்த கதாபாத்திரங்களுக்கிடையில் ஏதாவது மோதல்கள் முரண்பாடுகள் உண்டா? அல்லது அவை ஒன்றை ஒன்று முழுமைப்படுத்துகின்றனவா?
    - உம்மைப் பற்றி அல்லது குழுவைப் பற்றி ஏதாவது புதிதாகக் கற்றுக் கொண்டீரா?

---

## பட்டம் (செயற்பணித்தாள் விளக்கங்களுடன் கூடிய)

